Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும், பொன்னும் மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. சங்.135:15 பெப்ரவரி 2018 No.2

கர்த்தரின் வருகைக்கு நீங்கள் ஆயத்தமா?

Are you ready for the coming of the Lord?

W.C. Moore

"நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" மத். 24:44.

நான் ஆயத்தமா?

ஆயத்தமாயிருப்பது என்பது, ஆண்டவரின் வருகைக்காக தொடர்ந்து ஆயத்தமாக வாழ்வதாகும். "நான் ஆயத்தமாகவில்லை, அதிகம் தாமதிக்கு முன் நான் ஆயத்தமாகி விடுவேன் என்று நம்புகிறேன்" என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் எப்போதும் ஆயத்தமாயிருப்பதுதான் பாதுகாவல். எந்தச் சூழலிலும் ஆயத்தமாயிருக்க வேண்டும்! இயேசு ஒருபோதும் சோம்பலான வார்த்தைகளைப் பேசவில்லை. அவர் சபைக்குத் தலையானவர். எபே.5:23 அவர் நமது ஆண்டவரும் எஜமானுமாயிருக்கிறார். அவர் தாம் என்ன பேசுகிறார் என்பதை அறிந்திருக்கிறார். சிறியதோ, பெரியதோ உங்கள் ஆத்துமாவுக்கும் தேவனுக்குமிடையில் தடையாயிருக்குமானால் அல்லது உங்களுக்கும் எந்த மனிதருக்குமிடையில் தடையாயிருப்பின் அதை உடனே சரி செய்து விடுங்கள். எந்த விதத்திலும் முழுமையான வெற்றி இல்லாவிடில் ஜெபித்துக் கொண்டேயிருங்கள். அவரது வருகைக்கு இவ்வாறு ஆயத்தப்படுங்கள்.

ஆக்கினைத் தீர்ப்பில்லாமல்

உங்கள் இருதயம் எவ்விதத்திலாவது உங்களைக் குற்றப்படுத்துமானால் (1 யோ.3:19-24), இளைப்பாற வேண்டாம். விலகிச் செல்லவோ தாமதிக்கவோ வேண்டாம். உபவாசத்தோடும் ஜெபத்தோடும் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாகுங்கள். பின்பு ஆயத்தமாகவேயிருங்கள். நாம் ஆயத்தமாயிருக்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டது மிகவும் முக்கியமானது. நாம் ஆயத்தப்படுவது மட்டுமல்ல, தொடர்ந்து அவரது வருகைக்காக ஒரு வெற்றியுள்ள வாழ்வு வாழவேண்டும். கிருபையில் நாம் வளர வேண்டும். நமது இருதயமே நம்மைக் குற்றப்படுத்தாதபடிக்கு (கலா.5:16, 1யோவான்3:2-3) வாழவேண்டும். தொடர்ந்து ஆயத்தப்பட்டுக் கொண்டிருப்பதோடு, தேவன் நமக்கு அளித்த ஒளியில் நடந்து முன்னேறிச் செல்ல அவரது கட்டளைகளை நாம் நாட வேண்டும். நமது இலக்கை நோக்கித் தொடர வேண்டும் (பிலி.3:4) பவுல் தொடர்ந்தது போல நாமும் தொடர வேண்டும். நமது இருதயங்களின் உண்மை நிலைகளை நேர்மையுடன் சந்திப்பதும் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவதும் அவசியம்.

சார்லஸ் பின்னி தூய அவியின் வல்லமையான ஸ்நானத்தைப் பெற்றிருந்தபடியால், அவர் பேசிய வார்த்தைகள் கேட்ட மக்களில் பாவ உணர்வைக் கொண்டு வந்தது. சில வேளைகளில் இந்த வல்லமை அவரில் குன்றியிருப்பதை அவர் உணர்ந்தார். அவ்வேளைகளில் அவரது ஆத்துமாவுக்கும் தேவனுக்குமிடையிலுள்ள குறைகள் நிவிர்த்தியாகுமட்டும் அவரால், இளைப்பாற முடியவில்லை என்று அவர் கூறியிருக்கிறார். அவ்வாறு சரிசெய்த பின் மறுபடியும் அந்த தேவ வல்லமை அவரது வாழ்வின் மூலம் வழிந்தோடியது.

நாம் உத்தம கிறிஸ்தவ வெற்றியில் நிலைத்திருக்கும்படி ஜெப வாழ்வில் முன்னேறாவிட்டால் எந்த முகத்தோடு மக்களுக்குப் பரிசுத்த வாழ்வைப் பிரசங்கிக்கக் கூடும்? நான் ஒரு திருடனாயிருக்கப் பிறருக்கு எப்படி உத்தமமாயிருக்கப் போதிக்க முடியும்? நான் அசுத்த வாழ்க்கை நடத்திக் கொண்டு பிறரிடம் எப்படி பழுதற்ற தூய வாழ்க்கை வாழ போதிக்கக் கூடும்? நான் என் நாவை அடக்காமல் பிறருக்கு கடிவாளமிட்ட நாவைக் குறித்து எப்படிப் போதிக்க முடியும்? இயேசு சொல்கிறார், மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்து போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்? மத்.7:5.

ஆயத்தமாகுவது எப்படி?

ஜெபத்திற்குப் பதிலாக நமது ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றின் ஒவ்வொரு தேவையும் சந்திக்கப்பட முழு மனதோடு தேவனைத் தேடுவதே அவரைக் கண்டுபிடிக்கும் ஒரே வழி. வேத வசனம் உண்மையானது. "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" எரே.29:13. அரை குறையானதும், வெதுவெதுப்பானதுமான நிலை வேண்டாம். வெற்றியைத் தருபவர் தேவன் 1 கொரி.15:57. முதலாவது நீங்கள் வெற்றிபெறுங்கள் - பின்பு இந்த வெற்றியின் செய்தியை தூய ஆவியானவரின் வல்லமையோடு பிறருக்கு அறிவியுங்கள்.

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள். எப்பக்கத்திலுமுள்ள தூங்கிக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளை எழுப்புங்கள் யாக்.5:7-9 வசனங்களின் படி கர்த்தரின் வருகை சமீபமாயிருப்பதால் அவர்கள் ஆயத்தமாயிருக்கும்படி கூறுங்கள். ஆயத்தமாயிருப்பவர்களை மட்டுமே அவர் எடுத்துக்கொள்ள முடியும். ஏனெனில் மணவாளன் வந்த போது, "ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது" என்று மத்.25:10ல் படிக்கிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் இருப்பீர்களா? இதற்காக நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். லூக்.21:34,35. நம்மை நாமே வெறுக்க வேண்டும். விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். லூக்.21:36 வரப்போகிற தீங்குக்குத் தப்பவும் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கவும் வேண்டுமானால் இப்படியிருப்பது அவசியம்.

பயன்படுத்துங்கள் அல்லது இழந்து போவீர்கள்

தேவனுக்கான பசியை நீங்கள் உணரும்போது அவரை உடனே தேடுங்கள். இல்லாவிடில் தூய ஆவியானவரின் மெல்லிய அழைப்பை இழந்துவிடுவீர்கள். ஜெயங்கொள்ளும் ஒரு வாழ்வினை நீங்கள் வாஞ்சிக்காமலும், கூடிய மட்டும் தேவனை மகிமைப்படுத்தாமலும் வாழ்ந்தால் உங்கள் நிலைமை பரிதாபமானது. " சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கும் .... ஐயோ" ஆமோஸ் 6:1. வெது வெதுப்பாயிருக்கிறவர்களும், சுயதிருப்தியுடன் வாழுகிறவர்களும் வாந்தி பண்ணப்பட்டுவிடுவார்கள். வெளி.3:16, 17 விழித்துக்கொள்ளுங்கள் ஏசாயா 64:7 யாக்கோபைப் போல விடாமல் பற்றிக் கொள்ளுங்கள் ஆதி.32:24-28. தானியேலைப்போல அவரைத் தேடுங்கள். தானி.9:3,4 கெத்செமெனேயிலே இயேசு ஜெபித்ததுபோல முழுமனதோடு ஜெபியுங்கள். லூக்.22:39-46. நீங்கள் நிர்விசாரமாயிருந்து தேவனை உத்தமமாகத் தேடாவிட்டால் ஜெபிப்பதற்கான ஆவியானவரின் தூண்டுதல் உங்கள் ஆத்துமாவைவிட்டு எடுபட்டுப் போகும்.

"இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" மத் 25:28-29. மாறாகக் கொடுக்கப்பட்ட தாலந்தை பயன்படுத்தினவர்களைக் குறித்து உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான் என்றும் அந்த உவமையில் கூறப்படுகிறதே.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
Mobile: 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள். *ஏசா. 66:13.*

வாசகருக்கு என் அன்பு கிழுதீம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2018-ம் ஆண்டின் பெப்ரவரி மாத வருகையின் தூதன் பத்திரிகைக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். இந்த ஆசிரியர் கடிதத்தை டிசம்பர் 25-ம் தியதி முதல் பிரதியும், டிசம்பர் 31-ம் தியதி நகலும் எழுதுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சபையின் போதகர் எனக்கு முன்பாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது, சபை போதகருக்கு ஒரு மாதம் என்பது 4 நாட்கள் என்று கூறினார். அதையே அடியேன், எங்களுக்கு ஒரு வருடம் என்பது 12 நாட்கள், 12 உபவாச ஜெபங்கள், 12 பத்திரிகைகள் என்பேன், ஜெபிப்பீர்களா?

எவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டும்? விசுவாசிகள் இரண்டு முதல் **3 மணிநேரம்.** *முழு நேர ஊழியர்கள் மூன்று முதல்* **5 மணிநேரம்.** *தேசத்திற்காக ஜெபிக்கிறவர்கள்,* **இரவெல்லாம்** *ஜெபிக்க வேண்டும்.*

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக் கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார். லூக்கா 21:36

அப்படிக் சொன்ன அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே உபதேசம் பண்ணிக் கொண்டிருந்து, **இராக்காலங்களில் வெளியே போய், ஒலிவ மலை என்னப்பட்ட மலையிலே தங்கி வந்தார்.** *லூக்கா 21:36*

இந்த வசனத்தின் கருத்து என்ன? பின்பு அவர் புறப்பட்டு வழக்கத்தின் படியே ஒலிவ மலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடே கூடப் போனார்கள்.

அவ்விடத்தில் சேர்ந்தபோழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி,

அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால் படியிட்டு ... **ஜெபம் பண்ணினார்.**

அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

அவர் (இயேசு) மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத் தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது லூக்கா.22:39-44.

ஜெபம் மிகப் பெரிய ஊழியம், மிகப்பெரிய ஆயுதம். ஆனால் அதை பயன்படுத்துவோர் வெகுசிலரே. நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசேக். 22:30.

கடந்த மாத பத்திரிகையில், உபவாச ஜெபங்கள் நடைபெறும் இடங்களுக்கு 5 முதல் 7 பேர் செல்வதற்கான பிரயாண செலவை உத்தேசமாக கட்டத்திற்குள் வெளியிட்டிருந்தோம். பவுல் இவ்விதமாக எழுதுகிறார்: உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும் படியே நாடுகிறேன். பிலிப்பியர் 4:17.

எழுப்புதலுக்காக ஜெபிக்க 100 பேர் – Revive 100

ஜெபிக்க வாக்குக் கொடுத்த நபர்களுக்கும் All about Jesus என்கிற அழகான பரிசை அனுப்பியுள்ளோம். எழுப்புதலுக்காக இதய கதறல் 3 இடங்களுக்கான ஜெப அட்டைகளையும் அனுப்பினோம். கர்த்தருக்குச் சித்தமானால் இந்த வருட இறுதிக்குள் 100 பேராவது போராடி ஜெபிக்க, தீவிரமாய் இணைய உங்களை மிகவும் பட்சமாய் அழைக்கிறேன். இந்த ஜெப பட்டியல் தொடர்ந்து வெளியிடப் படும்.

நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்தனை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா

1. CN 00536 M சென்னை
2. KK 04765 M ஆரல்வாய்மொழி
3. MD 01090 M மதுரை
4. VN 00980 M ஸ்ரீவில்லிபுத்தூர்
5. TN 02014 S தச்சநல்லூர்
6. NI 01279 M குஜராத்
7. NC 01088 M நாகர்கோவில்
8. MD 00661 Y மதுரை
9. VN 00947 S சாட்சியாபுரம்
10. CN 02362 Y சென்னை
11. TJ 00275 R சீர்காழி
12. CN 01915 S சென்னை
13. TN 01607 Y திருநெல்வேலி
14. KK 03974 M நாகர்கோவில்
15. KK 00493 M நாகர்கோவில்
16. SA 01567 G நெய்வேலி
17. CN 01446 L சென்னை

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	27-01-2018 4-வது சனி	E.W.M. Prayer House, புதுக்கோட்டை
பிப்ரவரி	17-02-2018 3-வதுசனி	அசெம்பிளி ஆப் காட் சபை, கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, அரியா குப்பம், பாண்டிச்சேரி
ஏப்ரல்	14-04-2018 2-வது சனி	தமிழ் மெதடிஸ்ட் சபை, மும்பை
மே	19-05-2018 3-வது சனி	கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபை, தஞ்சாவூர்
ஜூன்	16-06-2018 3-வது சனி	பெங்களூர்
ஜூலை	21-07-2018 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	18-08-2018 3-வது சனி	விசுவாச ஜெப சபை, கல்லக்குறிச்சி, விழுப்புரம்
செப்டம்பர்	15-09-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, தேனீ
அக்டோபர்	18-10-2018 3-வது வியாழன்	அந்தமான்
நவம்பர்	17-11-2018 3-வது சனி	திருவனந்தபுரம்
டிசம்பர்	01-12-2018 1-வது சனி	விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபை, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம்.

(7-ம் பக்கம் பார்க்க)

காணிக்கை, கடிதங்கள், விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:	வங்கி கணக்கு எண்
வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001 VARUKAYIN THOOTHAN Newport Street, Nagercoil-629 001. **Mobile:** 95432 21008 **email:** Varukayinthoothan@hotmail.com	VARUKAYIN THOOTHAN A/c. No.:431521036 Indian Bank, W.C.C. Road, Nagercoil-1 IFS Code : IDIB000N006 வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்த்தருக்குக் காத்திருங்கள்

மார்த்தாளைப்போல தனக்கு முக்கியம் என்று தோன்றிய பற்பல காரியங்களைக் குறித்துக் கவலைப் படாமல் (லூக்.10:38-42) கர்த்தருக்காகக் காத்திருந்து அவரது பெலனை சொந்த மாக்கிக் கொள்வோம் (ஏசா.40:29-31, சங்.27:14) மாம்சம் ஒன்றுக்கும் உதவாது. (யோவா.6:63) தேவ பணியை செய்வதில் கூட நாம் செய்யும் விதம் எல்லாவற் றையும் கெடுத்துவிடக் கூடியதாயிருக் கிறது. நாம் சினமடைகிறவர்களாகவும், கடினமுள்ளவர்களாகவும், கசப்பு, அதிக கவலை பயம் போன்ற உணர்வுடையவர் களாகவுமிருந்தால் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு அவரது இனிமை, வலிமை, ஞானம் ஆகிய பண்புகள் நம்மில் வளர்ந்தோங்கச் செய்யும்படி அவருக் காகக் காத்திருப்பதை அவர் விரும்பு கிறார்.

அன்பினாலே எல்லாம் செய்யப்படட்டும்.

1கொரி.16:14ன்படி ''உங்கள் காரியங்களெல்லாம், அன்போடே செய்யப்படக்கடவது''. இவ்வாறு நாம் அனைத்தையும் அன்புடன் செய்யா விடில் மனந்திரும்பி தேவ ஒத்தாசை யுடன் அன்புடனே பேசவும், ஜெபிக் கவும், சிந்திக்கவும், செயல்படவும் ஆரம்பிப்போம். நமது நெருக்கடியான பணிகளில் எப்போதும் விழித்திருந்து ஜெபிக்கவும் கர்த்தருக்கு கீழ்ப்படியவும் அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தவும் கூடாமல் எளிதாக அன்பை இழந்து விடுகிறோம். நிச்சயமாக நாம் விழிப் புடனும் ஜாக்கிரதையுடனுமிருப்ப தோடு ஜெபிப்பது அவசியம் - நமது ஆவியைக் குறித்து எச்சரிப்பாயிருந்து நாம் எப்படிப்பட்ட ஆவியையுடைய வர்களாயிருக்கிறோமென்று கவனமா யிருக்க வேண்டும். சாத்தானுடைய தந்திரங்களைக் குறித்தும் பழைய மனிதனின் தலைதூக்குதல் குறித்தும், நமது வார்த்தைகளின் விளைவுகளைக் குறித்தும், நமது செயல்கள் நடை முறைகள் ஆகியவைகள் தேவனை முழுமையாக மகிமைப்படுத்துகின்ற னவா என்பது குறித்தும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பெற்ற நாம் அவருக்கு முன்பாக நமது பாவங்களைஅறிக்கையிட்டு, அவற்றை விட்டுவிட்டு தாழ்மையுடன் நடந்துகொள்ள தேவன் தாமே உதவி செய்வாராக.

1கொரி.13ம் அதிகாரம் உண்மை யான அன்பைக் குறித்த விளக்கத்தை நமக்குத் தருகிறது. நமது தியாக சிந்தை யுடன் செயல்படுத்தப்படும் முயற்சிகள் கூட மரம், வைக்கோல் போன்றவற்றால் எழுப்பப்படும் கட்டிடங்கள் போலிருக் கின்றன. ஏனெனில் ஆதியில் கொண்டி ருந்த அன்பு இழந்து போயிற்று. நாம் பணி செய்யும் விதம், நாம் பேசும் பேச்சு, நமது கண்களின் எடுப்பான பார்வை முகத்தின் தோற்றம் ஆகியவை நமது சுவிசேஷப் பணி தூய ஆவியானவரால் தூண்டப்படாமல் நமது சொந்த ஆவி யால் தூண்டப் பட்டுகின்றன என்று காண்பிக்கின்றன.

ஞாபகம்பண்ணி மனந்திரும்பு

தேவ அன்பை நமது இதயத்தி லிருந்தும், வாழ்விலிருந்தும் இழந்து போகும்போது நாம் தேவனுக்கேற்கும் பலியை செலுத்த முடியாது. "ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தா யென்பதை நினைத்து மனந்திரும்பி....." வெளி.2:5.

ஆம் நாம் நினைத்து மனந் திரும்புவோம். எப்படி நாம் பாவிகளுக் காக கண்ணீர் விட்டோம், எப்படி உத்தம ஆவியுடன் ஜெபித்தோம், பிற கிறிஸ்தவர் களின் தோல்விகளில் துக்கித்து அவர் களுக்காக ஜெபித்தோம் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்ப்போம். இப்போது இடறிய சகோதர சகோதரி களுக்காக ஜெபிப்பதற்குப் பதிலாக அவர்களை விமர்சித்து, நியாயந்தீர்த்து, குற்றம் சுமத்தினோம். அவர்களைக் குறித்தும் பேசி தீமைகளை அவர்களுக்கு எதிராக சிந்தித்தோம். நமது வாழ்வில் தேவ தயவு ஏற்படும்படி தெய்வீக துக்கத்தோடு நாம் நமது குறைகளை நினைத்து மனந்திரும்புவோம் 2 கொரி. 7:9-11.

''... தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிற வன், தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்'' 1யோவான் 4:16. பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கட வோம்; எனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது...."1யோவான் 4:7.

ஒருவரையொருவர் மன்னியுங்கள்

மற்ற கிறிஸ்தவர்கள் சொன்ன அல்லது செய்த காரியங்களை மன்னிக்க வேண்டிய தருணங்களுமுண்டு.

"ஒருவருக்கொருவர் தயவாயும், மனவுருக்கமாயும் இருந்து, கிறிஸ்து வுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' எபே.4:32. மேலும் இயேசு ''மற்றவர்களைக் குற்றவாளிக ளென்று தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப் படாதிருப்பீர்கள்....'' லூக்.6:37 என்று கூறியுள்ளார்.

நான் வருமளவும் வியாபாரம் பண்ணுங்கள்

லூக்.19:13

கைகளை மடக்கிக் கொண்டு, சோம்பலாக நமது ஆண்டவரின் வருகைக் காகக் காத்திருக்கவேண்டாம். தேவ சித்தத்தின்படி சுறுசுறுப்பாய் வியாபாரம் பண்ண வேண்டும் எபே.5:17ன்படி ''நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்''. அவர் வரும் வரை ஜாக்கிரதையோடு உத்தமமாக அவரது சேவையில் மகிழ்ச்சியாய் ஈடு படுங்கள். பாதாளத்தில் கிடந்த ஐசுவரிய வானுக்கு சொல்லப்பட்டது என்ன? மகனே நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித் தாய், லூக்.6:25 தேவபணியும் அதன் பிரசாரமும் உதாசீனப்படுத்தப்பட்டு, தேவனுடைய உண்மையான பணியாட் கள் ஆதரவும் உதவியும் நாடிக் கொண்டி ருக்கும்போது நாம் சொகுசாக வாழ்ந்து தற்காலத்திற்காக சுயநலத்தோட வாழ்ந்து கொண்டிருப்பது கூடாது. அப்படியானால் இயேசு வரும் போது ஆசீர்வாதமான ஒரு பரிசையும் எதிர் பார்க்க முடியாது. முதலாவது தேவனு டைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், மத்.6:33 கிறிஸ்து வுக்காக முதலாவது கரிசனை கொண்டு வாழ்வோம். அதுவே நமது இருதயத்தின் ஆழமான வாஞ்சையும் உயரிய நோக்க மாகவுமிருக்கட்டும்.

அதிகாலையில் எழுந்து என்னோடு ஜெபிப்பது யார்?

Who will rise early and pray with me?

H.W.Hodge

நமது ஆண்டவராகிய இயேசு நமக்கு ஒரு முன்மாதிரியை வைத்திருக் கிறார். அவர் அதிகாலையிலே இருட் டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தர மான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார் (மாற்.1:35)

யார் என்னோடு விழித்தெழும்பு வார்கள்? யார் தேவனிடம் மன்றாட்டு, அதிக நேர ஜெபம் ஆகியவற்றின் மூலம் பரத்திற்கு நேராக கண்களை ஏறெடுப் பார்கள்? நீங்கள் ஒருவரா? தேவ கிருபை யால் உங்கள் கரத்தை இதற்காக நீட்டு வீர்களா? முற்றிலும் அர்ப்பணித்த ஒரு நபர் போராடி ஜெபித்து, துதித்து, பாவ அறிக்கை செய்ய கிருபாசனத்தின் முன் மனிதருக்காக வரமுடியுமா? குடும்பத் தார், நண்பர்கள், பிசாசு இவற்றின் எதிர்ப்பு இருக்கலாம். ஆனால் உங்கள் இருதயத்தின் சிந்தை என்ன?

இதில் சுயத்தை சந்தோஷப் படுத்தும் மார்க்கம் இல்லை. சொகுசாகக் கடந்து செல்லும் மார்க்கமுமில்லை. இது சொகுசு வாழ்க்கைக்கு எதிரான ஒரு வாழ்க்கை.

சுயத்தை வெறுக்க அழைப்பு

அதிகாலை ஜெபத்திற்காக உங்களை அழைக்கிறேன். இத்தேவை யால் என் ஆத்துமா பற்றி எரிகிறது. சுயத்தை, வெறுக்க உங்களை அழைக் கிறேன். ***"சுயத்தை ஒறுத்தல் வாழ்வின் சூட்சும்"*** நான் உங்களை அழைக்கும் இந்தக் கடமை ஒருநாள் உங்கள் ஆத்துமாவிற்கு விலை யேறப் பெற்ற பழக்கமாக மாறும். உங்களை உயர்வான இடத்திற்கு நான் அழைக்கிறேன். அங்கு தேவன் தாமே தூய ஆவியால் உங்கள் ஆத்துமாவை செயல்படும் ஸ்தானமாக மாற்றுவார். உங்கள் ஆத்துமாவில் அவர் கிரியை செய்வார். உங்கள் கண்கள் கண்ணீரின் நீரூற்றாய் மாறும். அவர் உங்கள் மூலம் இழந்து போன உலகுக்காகக் கண்ணீர் விடுவார்.

"தேவனுக்காக இவ்வுலகில் மிக அதிகமான பணியினைச் செய்தவர்கள் அதிகாலையில் முழங்காலில் நின்றவர்களே' என்பது முதுமொழி. தேவன் நமது எண்ணங்களிலும் முயற்சிகளிலும் அதிகாலையில் முதலாவதாக இராவிட்டால் அந்த நான் பிற பகுதிகளில் அவர் கடைசியாக இருப்பார். அப்படிப் பட்டவர்கள் தேவ ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள். தூக்கத்தின் சங்கிலியை உடைக்க முடியாத ஒருவர் தேவன் மீது காண்பிக்கும் வாஞ்சை பெலவீனமானது. அதனால் எந்த பயனு மில்லை.

அதிகாலை ஜெபத்தின் சந்தோஷம்

எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக நான் அதிகாலை ஜெபத்தை ஆரம்பித் தேன். அது ஒரு பரிசோதனை அல்ல. அது எனக்கு ஒரு வெற்றியாயிருந்தது. ஆரம் பத்தில் மாம்ச மனுஷன் எதிர்த்தான். பல ஆண்டுகள் தூக்கத்தில் பழகிப்போன சரீரம் ஆத்துமாவின் தேவைக்கு இட மளிக்கவில்லை. சாத்தானும் சம்மதிக்க வில்லை. மனிதரும் இதைப் பொறுத்துக் கொள்ளவில்லை. பூமியிலும் வானத் திலும் இதற்கு எதிர்ப்புதான்.

தேவ மனிதனே, இவைகளை கவனிக்காதே. *"சுயத்திற்கு கிடமளிப்பது மரண நியதி. சுயத்தை வெறுப்பது ஜீவனின் நியதி'*.

உலகம் கண்விழிக்கு முன்னால் பலமணி நேரங்கள் தேவனோடு செல விடும் சந்தோஷம் வரும் அனைத்து சோதனைகளுக்கும் பாடுகளுக்கும் முற்றிலும் ஈடு செய்யக் கூடியது. மட்டு மல்ல இதனால் தேவனுக்குக் கொண்டு வரும் மகிமையோ அளவிட முடியாதது.

ஒரு மனிதனுக்குக் குறிப்பிட்ட மணிநேரங்கள் இரவு தூக்கத்திற்குத் தேவை. எனது சரீரத்தைப் பரிசோதித்த போது எனக்கு 7 மணி நேரம் தூக்கம் தேவை எனக் கண்டேன். இரவில் 7 மணி நேரம் கிடைக்காவிட்டால் பகலில் 7 மணிநேரம் தூங்கலாம். ஜான் வெஸ்லியின் சரீரத்திற்கு 6 மணி நேரமும் அதோடு 1/2 மணி நேரமும் தேவைப்பட்டது. அவர் இரவில் 6 மணி நேரமும் பகலில் உணவுக்குப் பின் 1/2 மணி நேரமும் தூங்குவது வழக்கம். ஆனால் நாம் ஜெபிப்பதற்குக் கிறிஸ்துவின் மாதிரியை மட்டும் பின்பற்ற வேண்டும்.

ஜெபிப்பது எப்படி?

- அதிகமாகவும், அடிக்கடியாகவும், நீண்ட நேர மாகவும் அந்தரங்க ஜெபம் இருக்க வேண்டும்.
- உலகமும், குடும்பத்தாரும் தடைசெய்யாத நேரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- தங்கள் பரிசுத்த கரங்களை உயர்த்தி அனைத்து மக்களும் எங்கும் ஜெபிக்க தேவன் விரும்புகிறார்.
- பிரசங்கிக்கிறவர்கள் மற்றெல்லாரைக் காட்டிலும் அதிகமாக ஜெபிக்க வேண்டும்.
- போதகர்கள் முக்கியமாக தங்கள் மந்தைக் காகவும், குடும்பங்களுக்காகவும், இழந்து போன உலகுக்காகவும் மன்றாடி ஜெபிப்பது கடமை.
- காலம் போதாமை தவிர பிற சமயங்களில் தாராளமாக ஜெபிக்க வேண்டும்.
- இயேசுக்கிறிஸ்து நாம் இரவும் பகலும் ஜெபிக்கக் கட்டளையிட்டுள்ளார்.

அவர் எப்படி ஜெபித்தார்:

"அவர் அதிகாலையில் இருட் டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தர மான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணினார்" *(மாற்.1:35)*

"அவர் ஜனங்களை அனுப்பி விட்ட பின்பு ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார் " மாற்.6:46. "அந்நாட்களில் அவர் ஜெபம் பண்ணும் படி ஒரு மலையின் மேல் ஏறி இரா முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்" (லூக்.6:12)

இழந்து போனவர்களுக்காக முழங்காலில் நிற்பது

ஜெபஅறை நரகத்தின் வல்லமை களுக்கும் தேவனுடைய பரிசுத்தவான் களுக்குமிடையில் நடைபெறும் போரில் இயேசுக் கிறிஸ்துவை சேனாபதியாகக் கொண்டு போரிடும் முக்கிய இடமாகும். சாத்தான் கண்ணீரோடும், வியாகுலத் தோடும் போரிடும் போராளிகளை இடம் பெயரச் செய்ய மிகப்பெரிய முயற்சியில் ஈடுபடுகிறான். ஏனெனில் அவர்கள் அழிந்துபோகும் ஆத்துமாக் களுக்காக முழங்காலில் நிற்கிறார்கள். இது தேவனுக்காகச் செய்யும் கடைசி முயற்சி. முழங்கால் ஜெபம் தளரக் கூடாது. தமது மணவாட்டியை சேர்த்துக் கொள்ள இயேசு சீக்கிரம் வருகிறார்.

தேவனைக் கனம்பண்ணுதல்

Honouring God

Arthur W.Pink

"...என்னை கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன்" 1 சாமு.2:30

அவர் தேவன்:– தேவனைப் பற்றிய சரியான காட்சி நமக்கு வேண்டும். வேதம் நமக்கு வெளிப்படுத்துகிறபடி நமது, எண்ணங் கள் உருவமைக்கப்படாவிட்டால், அவரது குணாதிசயம், பரிபூரணத்துவம் ஆகியவற்றைக்குறித்து தப்பான அபிப் பிராயம் ஏற்படும். ஏராளமான கிறிஸ்த வர்கள் கூட ***"அறியப்படாத தேவன்"*** என்று அவரை ஆராதிக்கிறார்கள். ஆனால் சிலர் தவறான புரிந்து கொள்ளுதலால் அவரைக் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் தேவன் "உன்னைப்போல நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்" சங்.50:21 என்று கடிந் துரைக்கிறார். அவரது சர்வவல்லமை, நியாயம், தூய்மை, மகத்துவம் ஆகியவை ஒப்புயர்வற்றவை. இவை கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பெற்றவர்களாலும் உணர்ந்து கொள்ளப்படவில்லை.

யாத்.15:11, சங்.104:1 ஆகிய வசனங்களின்படி இணையற்ற அவரது மேன்மையின் மகிமைக்காக அவரை கனம்பண்ண வேண்டும். அவரை நமது இருதயங்களில் பரிசுத்தம் பண்ணி கனம்பண்ண வேண்டும். *ஏசா.8:13* அவரை நம்பி, தொழுதுகொண்டு கீழ்ப்படிய வேண்டும். நமது பொது ஆராதனை ஸ்தலங்களில் அவர் கனம் பண்ணப்பட வேண்டும். தேவன் பரிசுத்த வான்களின் ஆலோசனை சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். *சங்.89:7* அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். *சங்.66:2*

அவரது குமாரன்:– கிறிஸ்துவை கனம் பண்ணுவதை தேவன் விரும்புகிறார். முன்னணையில் இயேசு பாலன் கிடத்தப்பட்டதும் பரம சேனையின் திரள் பெத்லகேமின் புல்வெளிகளுக்கு அனுப்பப்பட்டு "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமு முண்டாவதாக" லூக்.2:14 என்ற பாடலை பாடச் செய்தார். அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றபோது பரலோகம் திறக்கப்பட்டு, இது என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் மத்.3:17 என்று பிதா விளம்பினார். சிலுவையில் சொல்லொணா ஈனக் கோலம் அடைந்தபோது நூற்றுக்கதிபதி மூலம் "மெய்யாகவே இவர் தேவ குமாரன்" என்று சாட்சி கூறச் செய்தார் மத்.27:54

பூலோகில் அவரது பணி முடிந்த போது தேவன் அவரைத் தமது வலது பாரிசத்திற்கு உயர்த்தினார். யோவான் 5:23ன்படி குமாரனைக் கனம்பண்ணாத வன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான். வெளி.5ன்படி அனைத்து விதமான ஆராதனைகளும் பிதாவுக்குரியவைகளா யிருப்பது போலவே குமாரனுக்கும் உரியவை. நாம் கிறிஸ்துவில் செய்து நிறைவேற்ற வேண்டிய பணியினை சார்ந்து கொண்டு, அவரது நுகத்தை நம்மேல் ஏற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து அவரது முன்மாதிரியை பின்பற்றுவதால் அவரை கனம்பண்ணக் கூடும்.

அவருடைய வார்த்தை:– சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர் சங்.138:2 அவரது பரிபூரணத்துவம் வெளிப் படுத்தப்பட்ட எந்த ஊடகத்தைக் காட்டிலும் அவருடைய வார்த்தை மகிமையானது. அவரது ஞானமும் வல்லமையும் அவரது சிருஷ்டிப்பாலும் அவர் கொடுப்பதாலும் வெளிப்படுத்தப் பட்டன. ஆனால் அவருடைய சித்தமும் இரட்சிப்பின் வழியும் அவருடைய வார்த்தைமூலமாகவே அறியப்படுகி றேன். அவரது வார்த்தைக்கு நாம் கொடுக்கும் மரியாதை தேவனுக்கு நாம் அளிக்கும் கனத்தின் அளவை வெளிக் காட்டும். நாம் கேள்வி கேட்காமல் அதனை தேவனிடமிருந்து அவரது ஏவுதலால் வந்த தொடர்பு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் தெய்வீக அதிகாரத்தை நமது விசுவாசத் தின் சட்டமாக்கி மற்றவர்கள் எப்படி விசுவாசிக்கிறார்கள், செயல்படுகிறார்கள் என்று பாராமல் அதைப் பயிற்சித்து

இரவும் பகலும் அதை தியானிக்க வேண்டும். அது நமது ஆத்துமாவின் உணவாக வேண்டும். அதின் போதனைகளின்படி நமது குணம் நடத்தை ஆகியவை உருவாகி கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, எச்சரிக்கைகளை கவனித்து, அதின் வாக்குத்தத்தங்கள் மூலம் பெலனையும் ஆறுதலையும் பெற வேண்டும்.

அவரது சுவிசேஷம்:– இது சபைகள் தேவனை கனம்பண்ண கிறிஸ்து மூலம் பாவிகளுக்கு வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகக் கிருபையின் பிரஸ்தாபம். நியாயப் பிரமாணம் சுவிசேஷத்திற்குக் கீழாக பிரசங்கிக்கப்பட வேண்டும். பாவிக்கு நியாயப்பிரமாணம் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது. அதனால் அவன் தனது சாபம், குற்றச் சாட்டு ஆகியவைகளிலிருந்து விடுபட கிறிஸ்துவிடம் செல்ல வேண்டிய தேவை கற்றுக் கொள்ளப்படுகிறது. ரோமர் 3:20ன்படி பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது. எனவே நியாயப்பிரமாணத்தைப் பிரசங்கிப்பதால் பாவி தண்டனைக்குத் தப்புவதில்லை. ஆனால், சுவிசேஷம் விசுவாசிக்கிறவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. ரோமர் 1:16 திரியேக தேவன் சபை சுவிசேஷத்தை அறிவிப்பதால் மகிமைப்படுகிறார். சுவிசேஷம் சுத்தமாகவும் சுயாதீனமாகவும் அறிவிக்கப்பட வேண்டும்.

அவரது ஆவி:– சுவிசேஷத்தைப் பிரசங்கிப் பவரின் உத்தமம் அல்லது வாஞ்சை ஒரு ஆத்துமாவை உயிர்ப்பிக்க முடியாது என்பதை நாம் அறிய வேண்டும்.

பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் சக.4:6. ஆனால் சபைகள் வாலிபர்களைக் கவர்ந்து கொள்ள உலக வழிமுறைகள் மீது நம்பிக்கை வைத்து, இசையையும் பயன்படுத்துகிறார்கள். அதன் விளைவாக ஆவி அனைத்துப் போடப்படுகிறது. நம்மை நாமே அர்ப்பணித்து முழங்காலில் நிற்பதுதான் இன்றைய மிகப்பெரிய தேவையும் இச்சமயத்தின் அழைப்புமாயிருக்கிறது.

அவருடைய காரியம்:– உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம்பண்ணு நீதி.3:9. ஐசுவரியத்தைப் பெற வல்லமை கொடுப்பவர் தேவன் உபா.8:18 நாம் அதனை சுய இச்சைகளுக்காகவும் வீணான காரியங்களுக்காகவும் செலவிடக்கூடாது. பரிசுத்த பணிவிடைகளுக்கும், தர்ம காரியங்களுக்கும் மட்டுமே அவை செலவிடப்பட வேண்டும். கிறிஸ்து இன்னும் காணிக்கைப் பெட்டியின் அருகே உட்கார்ந்து நாம் எப்படி காணிக்கை செலுத்துகிறோம் என்று பார்க்கிறார் மாற்.12:41. அது பணமாக மட்டுமல்ல நமது தாலந்துகளும் அவரை கனப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டும். அது நமது புகழ்ச்சிக்காக பயன்படுத்துவது கூடாது. நாமும் நமக்குரிய யாவும் அவருடைய நாம மகிமைக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

என்னை கனம்பண்ணுகிறவனை நானும் கனம் பண்ணுவேன் என்பதை சரித்திரம் நிச்சயப்படுத்துகிறது. தேவனை கனப்படுத்தி, அவரது வார்த்தையை அறிவித்த நாடுகள் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன. சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவரது ஆவியை சார்ந்து வாழ்ந்த சபைகள் கனியுள்ளவைகளும், செழிப்புள்ளவைகளுமாயிருக்கின்றன. குமாரனை கனப்படுத்தி வேதவசனத்தின் படி வாழ்ந்த தனிநபர்களின் வாழ்வில் மிகுந்த சமாதானமும் சந்தோஷமும் அவர்களது ஆத்துமாக்களை நிரப்பியிருப்பதை நாம் அறிவோம்.

தேவ பயம்

The fear of God

John Gill

காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. பிர. 12:13.

தெய்வீக ஆராதனையில் தேவ பயத்திற்கு ஒரு முக்கிய இடமுண்டு. தேவனை ஆராதிக்கிறவர்கள் வேத வாக்கியம் விளக்குவதின்படி அவருக்குப் பயப்படுகிறவர்கள் எனப்படுவார்கள். ஞானியின் அபிப்பிராயப்படி மார்க்கம் முழுமையும் இரு காரியங்களில் அடங்கியிருக்கிறது. அவை, தேவபயம் மற்றும் கற்பனைகளைக் கைக் கொள்ளுவதுமாகும். ஆராதனையே தேவபயம் என்று விளக்கப்படுவதால் அது நிகழ்த்தப்படும் விதம் தேவ பயத்திலும், தேவ பயத்தோடு மிருக்க வேண்டும். ஏனெனில் தேவன் கனத்தோடும் தேவ பயத்தோடும் சேவிக்கப்பட வேண்டும். எபி. 12:28.

தேவ பயம் எப்படி விளங்குகிறது

பாவத்தின் மீது வெறுப்பு ஏற்படுவதில்:– தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம் நீதி.8:13. தீமையை வெறுத்து ரோமர். 12:9 தேவனுக்குப் பயப்படுகிறவன் அவருக்கு நேராக பயபக்திக்குரிய அன்புடையவனாயிருப்பான். பாவம் அவருக்கு எதிராயிருப்பதால் அதை வெறுப்பான். கர்த்தரில் அன்பு கூருகிறவர்களே, தீமையை வெறுத்து விடுங்கள். சங்.97:10. இத்தகைய மனிதன் தீய எண்ணங்கள், தீய வார்த்தைகள், தீய செயல்கள் போன்ற தீமையான யாவற்றையும் வெறுப்பான். பாவம் எந்த வடிவிலிருந்தாலும் அது மிகவும் பாவமானதே. அது பிரமாணத் தை மீறுவதும், தேவனுடைய இயற்கைக்கு எதிரானதுமாயிருப்பதால் அவரது நீதியுள்ள ஆத்துமா அதனை வெறுப்பதுபோல கர்த்தருக்கு பயப்படும் நல்ல மனிதனும் அதனை வெறுப்பான்.

தீமையை விட்டு விலகுவதிலிருந்து:– கர்த்தருக்குப் பயப்படுவதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். பகிரங்கமான பொதுவான பாவங்களிலிருந்து மட்டுமல்ல, இரகசிய பாவங்களிலிருந்தும் விலகுவார்கள். அவர்கள் தீமையின் தோற்றத்தை விட்டே விலகுவார்கள். பாவத்திற்கு வழிகாட்டும் எந்தக் கண்ணியையும் தவிர்க்க முயற்சிப்பார்கள்.

துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே நீதி.4:14 என்ற வசனங்களை அவர்கள் உபதேசமாக ஏற்றுக் கொள்வார்கள்.

பிறர் செய்வதைப் போல் செய்யாமலும் முன்பு அவர்கள் செய்தவைகளை மறுபடியும் செய்யாமலும் இருப்பதிலிருந்து:– முன்பிருந்த அதிபதிகள் செய்த சில தீமைகளை நெகேமியா கூறிவிட்டு நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை என்கிறார். நெகே.5:15 தேவ பயமுள்ளவர்கள் பாவம் செய்வதில்லை என்பதை விட தங்களை பாவம் செய்ய பிறரைப் போல இடமளித்து, அவர்களைப்போல நடப்பதில்லை என்று சொல்லலாம். அவர்கள் இன்னும் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. தேவ கிருபை பிறகாரியங்களை அவர்களுக்குப் போதிக்கும்.

தேவனையோ பிறரையோ துக்கப்படுத்தாமல் தங்களை கவனமாகப் பார்த்துக் கொள்வதிலிருந்து:– தேவனுக்கு அடுத்தபடியாக தேவ பிள்ளைகளுக்கு எதிராக வார்த்தையினாலோ, செயலினாலோ துக்கப்படுத்தாமலும் யாருக்கும் இடறுதலாயிருக்காமலிருக்கவும் முயற்சிப்பர் லேவி.19:14

தேவனை தொடர்ந்து ஆராதிப்பதிலும் அவரது சித்தத்தை கண்டிப்பாக நிறைவேற்றுவதிலும், கடைப்பிடிப்பதிலும் அறியலாம்.

தேவனை வணங்குவதில் நிர்விசாரமாயிருப்பதில்லை. அவருடைய சித்தத்தை அறியும் விருப்பமும் அதைக் கடைப்பிடித்தலும் காணப்படும். சகரியா எலிசபெத்தைப் போல கர்த்தரிட்ட சகல கட்டளைகளையும் நிறைவேற்றி குற்றமற்றவர்களாயிருப்பர்.

தேவன் கேட்பவற்றை எவ்வளவு அருமையாயிருந்தாலும் கொடுக்க எந்த வேளையிலும் ஆயத்தமாயிருப்பர்.

ஆபிரகாமிடம் தன் ஏக புத்திரனாகிய ஈசாக்கை பலியிடும்படியாகக் கட்டளையிட்டபோது அவன் உடனடி கீழ்ப்படித்தான். தேவன் அவனைக் குறித்து "எனக்காக ஒப்புக்கொடுத்த படியால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன்

உலகம் கண்விழிக்கு முன்னால் பலமணி நேரங்கள் தேவனோடு செலவிடும் சந்தோஷம், வரும் அனைத்து சோதனைகளுக்கும் பாடுகளுக்கும் முற்றிலும் ஈடு செய்யக்கூடியது, மட்டுமல்ல இதனால் தேவனுக்குக் கொண்டு வரும் மகிமையோ அளவிடமுடியாதது.

என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்றார். ஆதி 22:12 **இது தேவனுடைய சாட்சி.**

தேவ பயத்தின் ஊற்று:– தேவ பயம் இயற்கையானது அல்ல. அது இயற்கையான மனிதனில் காணப்படுவதில்லை. மனிதனுடைய கேடான நிலை குறித்து, ரோமர் 3:18ல் அவர்கள் கண்களுக்கு முன்பாக தேவ பயமில்லை என்று வாசிக்கிறோம்.

தேவ கிருபையிலிருந்து தேவபயம் எழும்புகிறது:– இது கிருபையின் ஒரு ஈவு. அவர்களும், அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி அவர்கள் எந்நாளும் எனக்குப் பயந்து என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும் உபா.5:29. தேவனைத் தவிர யாரும் இத்தகைய இருதயத்தினைத் தர முடியாது. அவர்கள் தங்களுக்கும் தங்கள் பின்னடியாருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்கு பயப்படும்படிக்கு நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு, அவர்களுக்கு நன்மை செய்யும்படி நான் ..... எனக்கு பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைத்து.... எரே.33:39,40 என்று தேவன் வாக்களித்திருக்கிறார்.

தேவ பயத்தைப் பெற்றுக்கொள்ள வேதவசனமும், ஜெபமும் வழியாக அமைகின்றன:– தேவ பயம் ஒரு கடமை. ஆராதனையை இது வெளிப்படுத்துகிறது. இதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகளே வந்து எனக்குச் செவிகொடுங்கள். கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன். சங்.34:11 அவைகளைக் கற்றுக் கொள்வதைக் குறித்து உபா.4:10; 17:19 ஆகிய வசனங்களில் காண்கிறோம். அது ஒரு கிருபையாயிருப்பதால் கருத்தோடு அதைத் தேடவேண்டும். சங்.86:11, நீதி.2:3-5 தேவனுடைய கிருபை நற்குணம் ஆகியவற்றின் புதிய கண்டுபிடிப்புகளால் தேவபயம் உற்சாகப்படுத்தப்பட்டு, தூண்டப்பட்டு பெருகுகிறது. உமக்கு பயப்படும்படிக்கு உம் மிடத்தில் மன்னிப்பு உண்டு சங்.130:4.

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களின் சந்தோஷம்:– சங்.147:11ன்படி தமக்கு பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

அவர்கள் அவரால் அங்கீகரிக்கப்பட்டு, அவருக்கு ஏற்புடையவர்களாயிருக்கிறார்கள். அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி, தேவன் பட்சபாத முள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும், அவருக்குப் பயந்திருந்து, நீதியை செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

தேவனுடைய இருதயம் அவர்களுக்கு நேராருக்கிறது:– அவர்களுடைய துன்பங்களிலெல்லாம் அவர்கள் மேல் அவருக்கு இரக்க உணர்வு ஏற்படுகிறது. அவர்கள் துக்கப்படும் போதெல்லாம் அவரும் துக்கப்பட்டு ஆதரவாகவும் ஆறுதலாகவுமிருக்கிறார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங்.103:13

கர்த்தருடைய கண்கள் நன்மைக்காக அவர்கள் மேலிருக்கிறது:– தமக்குப் பயந்து.... கர்த்தருடைய கண்கள் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. சங்.38:18 பயந்தவர்களைப் பாதுகாக்கவும் அவர்களது விரோதிகளைத் தண்டிக்கவும் அவரது கண்கள் நோக்கமாயிருப்பதோடு குறிப்பாக அவரது விசேஷித்த அன்பு கிருபை, இரக்கம் ஆகியவை அவர்கள் மேல் காண்பிக்கப்பட்டு ஒருபோதும் விலக்கப்படாமலிருக்கும். எனவே அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியோடு பராமரிக்கப்படுவார்கள். (சங்.103:11,17, லூக்.1:50)

தமக்குப் பயந்தவர்களோடு தொடர்பு கொள்ள திறந்த கரத்தோடு ஆயத்தமாயிருக்கிறார்:– தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். சங்.111:5 மேலும் ஆவிக்குரிய ஆகாரம், அவரது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் யாவற்றையும் அருளுகிறார். தமது ஆவியின் ஆறுதலை அளித்து அவற்றில் நடக்கும்படி செய்கிறார். கிருபையை புதிது புதிதாக அளித்து, இறுதியில் மகிமைப் படுத்துகிறார். எந்த நன்மையையும் இந்நாட்களில் எடுத்துப் போடப் படுவதில்லை. மேலும் அவர்களது விசுவாசத்தை ஆதரித்து, நம்பிக்கையை பலப்படுத்தி அவரிலுள்ள நம்பிக்கை சார்பு ஆகியவற்றை பலப் படுத்துகிறார்.

அவருக்குப் பயந்தவர்களோடு அவருடைய இரகசியம் இருக்கிறது:– சங்.25:14 எனவே அவர்களைத் தமது நெருங்கிய நண்பர்களாக பயன் படுத்துகிறார். அவர்களுக்குத் தமது உடன்படிக்கையையும் ஆசீர்வாதங் களையும், வாக்குத்தத்தங்களையும் காண்பிக்கிறார். அவர்களுடைய வேண் டுதல்களைக் கேட்டு அவர்கள் வாஞ்சை களை நிறைவேற்றுகிறார். அவர்கள் கூப்பிடுதல்களைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார். சங்.145:19 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் அவரால் நினைவு கூரப்பட்டு அவரது உருக்க இரக்கங் களும் அன்பின் செயல்களும் பூர்வமுதல் அவர்களுக்குக் காண்பிக்கப்படும். தாழ்ந்த நிலையிலிருந்த அவர்களை நினைத்து தூக்கி எடுக்கிறார். அவர்களுக் கான வாக்குத்தத்தங்களை நிறைவேற்று கிறார். கர்த்தருக்குப் பயந்தவர்களுக் காகவும்... ஞாபக புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக் கிறது. மல்.3:16

ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் அரோக்கியம் இருக்கும். மல்.4:2 கிறிஸ்துவாகிய இரட்சகர் வந்து தமது மன்னிக்கும் கிருபையையும் இரக்கத்தையும் காண்பிப்பார். உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி தன் தேவனை சார்ந்து கொள்ளக்கடவன் ஏசா.50:10

'**இரட்சிப்பு**' ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்த்து அதை புதுமுறையில் செயல்படுத்துவதும், அதை முழுமையாக அனுபவிப்பதும் அவர்களுக்கு அருகிலிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுவர்களுக்குரிய ஆசீர்வாதம் இது. சங்.85:9

மிகப்பெரிய நற்காரியங்கள் இப்படிப்பட்டவர்களுக்காக வைக்கப்பட்டுள்ளன. அவை தேவனுடைய இருதயத்திலும், கிறிஸ்துவின் கரங்களிலும் பரலோகத்திலுமிருக் கின்றன. அந்த ஆசீர்வாதமான நம்பிக்கை, நீதியின் கிரீடம் ஆகியவற்றை கண் காணவுமில்லை, காது கேட்டதுமில்லை. மனித இருதயத்தில் தோன்றினதுமில்லை. உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுப் புத்திரருக்கு முன்பாக உம்மை நம்பு கிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது. சங்.31:19

பலவீனத்திலிருந்து பலப்படுத்தப்படுதல்

Out of Weakness made strong

George Muller

நமது ஒவ்வொரு பெலவீனமும் ஆண்டவராகிய இயேசுவின் வல்லமை வெளிப்பட எதுவாகிறது. அவர் நம்மை ஒருபோதும் விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை. நமது பெலவீனம் அதிகமாயின் அவர் அருகில் வந்து தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார். நமது தேவைகள் அதிகமாயின் நான் இன்னும் அதிகமாக ஒரு நண்பரைப் போல் அவரை சார்ந்து கொள்ள வேண்டும். எழுபது ஆண்டுகளாக இது என் அனுபவம். சோதனை பெரிதாகவும் கஷ்டம் அதிகமாகவும் வரும்போது ஆண்டவரின் உதவியும் நெருங்கி வருகிறது. பலவேளைகளில் நான் பிரமிப்படைவது போல தோன்றினாலும் அப்படி நடந்ததேயில்லை, இன்னும் நடப்பதில்லை. அதிக ஜெபம், அதிக விசுவாசம், அதிகப் பொறுமை ஆகியவை ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். எனவே நாம் செய்ய வேண்டியது நமது இருதயத்தை அவருக்கு முன்பாக ஊற்றவேண்டும். உதவி அவருடைய வேளையில் நிச்சயமாக வரும் என்பது சத்தியம்.

பிப்ரவரி மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக

இதய கதறல் – 2018

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 17-02-2018
3- வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : A.G. சபை,
R.S. புரம், கோயம்பத்தூர்

தொடர்பு : Rev.J.ஜேம்ஸ் வில்லியம்ஸ்டன்
மொபைல் : 98 43 22 80 00

மாதந்தோறும் தூங்கும் 300 பேர்
Mission 300

1. CN 02001 R சென்னை
2. TC 01710 R தூத்துக்குடி
3. CN 02915 R சென்னை
4. CN 01677 காஞ்சி
5. TN 01392 R திருநெல்வேலி
6. TC 00541 R தூத்துக்குடி
7. KR 00875 R திருவனந்தபுரம்
8. CN 01943 R சென்னை
9. CN 00723 R சென்னை
10. NA 02726 R திருவண்ணாமலை
11. ER 00716 கோபி
12. CN 00173 R ஆவடி
13. MD 00737 மதுரை
14. TN 00199 திருநெல்வேலி
15. CN 02940 சென்னை
16. TC 01722 R நாசரேத்
17. MD 00786 R மதுரை
18. MD 00814 R மதுரை
19. SM 02120 சேலம்
20. MY 01743 R KGF
21. NG 00291 R குன்னூர்
22. NG 00249 நீலகிரி
23. SM 02050 R மேட்டூர் டேம்
24. TN 02013 R திருநெல்வேலி
25. CN 02003 R சென்னை
26. TN 01896 கூட்டப்புளி
27. TN 00542 R திருநெல்வேலி
28. KR 00753 ள்ணாகுளம்
29. CN 02923 R சென்னை
30. CN 00536 R சென்னை
31. CB 00833 கோயம்புத்தூர்
32. CN 00371 சென்னை
33. CN 00943 R சென்னை
34. NI 01130 மும்பை
35. RD 00210 கன்னிராஜபுரம்
36. TJ 00275 R சீர்காழி
37. CB 00135 R கோயம்பத்தூர்
38. SA 01654 R நயினார் பாளையம்
39. NA 00413 R திருவண்ணாமலை
40. CN 02632 R சென்னை
41. TN 02014 தச்சநல்லூர்
42. KK 04774 R குமரி மாவட்டம்
43. SA 01654 விழுப்புரம்

தரிசனம் 2019 - Vision 2019

கர்த்தருக்குச் சித்தமானால் 2019-ம் ஆண்டு ஒரே ஒரு முறை உங்கள் சபை கட்டடத்தை எழுப்புதலுக்காக இதய கதறல் 7மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தருவீர்களா?

மாதம்	இடம்
ஜனவரி	
பிப்ரவரி	
மார்ச்	
ஏப்ரல்	
மே	
ஜூன்	
ஜூலை	
ஆகஸ்ட்	
செப்டம்பர்	
அக்டோபர்	
நவம்பர்	
டிசம்பர்	

ஒரு அன்பான வேண்டுகோள்

நீங்கள் ஒவ்வொரு தடவை எங்களை தொடர்பு கொள்ளும் போதும் தயவாய் 1. உங்கள் பத்திரிகை பதிவு எண், 2. பின்கோடு எண், 3. உங்கள் தொலை பேசி எண் மொபைல் அல்லது லேண்ட் லைன் ஆகியவற்றை சேர்த்து எழுதுங்கள்.

வாசகர் கடிதம்

சகோ. L.S.P
த.எண் 6923
மத்திய சிறை, சேலம் – 636 007.

தங்களுக்காகவும் தங்கள் குடும் பத்தினர்காகவும் உடன் ஊழியர்களுக் காகவும் சபையாருக்காகவும் தொடர்ந்து நானும், இங்கு உள்ள சபையாரும் ஜெபிக்கிறோம்.

இந்த புதிய ஆண்டில் கர்த்தர் தாமே உங்களது மனவிருப்பத்தின்படி உமக்கு (உங்களுக்கு) தந்தருளி உமது ஆலோசனை யெல்லாம் நிறைவேற்று வாராக. வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

வாசகர் தொலைபேசி

ஒரு வயதான அன்புத் தாயார் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, எனக்கு 81 வயதாகிறது. விசேஷமாக ஜெபிப்போம் என்று பத்திரிக்கையில் எழுதியிருந்தீர்கள்.மேலும் எழுப்புதலுக் காக நானும் ஜெபம் பண்ணுகிறேன். ஜெப அட்டைகள் அனுப்பிதாருங்கள் என்று கேட்டார்கள். அவர்கள் பத்திரிகை பதிவு எண் 01567 வயதான உங்களுக்காக ஜெபிக்க நீங்கள் வாஞ்சித்தால், தயவாய் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். 100 ஜெப வீரர் பட்டியலில் இணைய விரும் பினாலும் எங்களுக்கு தெரியபடுத்துங் கள், நன்றி.

உங்கள் விசேஷ ஜெபத்திற்காக

1. *ஜனவரி 27-ம் தேதி புதுக்கோட்டை*
2. *பெப்ரவரி 17-ம் தேதி கோயம்பத்தூர்*
3. *மார்ச் 7-ம் தேதி உபவாச ஜெபம் ஒழுங்கு செய்வதற்காக அந்தமான் செல்லும் மகன் சாமுவேல்.*
4. *மார்ச் 17-ம் தேதி பாண்டிச்சேரி*
5. *கர்த்தருக்குச் சித்தமானால் ஏப்ரல் 12-ம் தேதி காலை 5.00 மணிக்கு நாகர்கோவில் ஜங்சனிலிருந்து புறப் பட்டு 13-ம் தேதி இரவு மும்பை போய் சேருகிறோம். 14-ம் தேதி உபவாச ஜெபம் நடைபெறும். 15-ம் தேதி காலை ஆராதனையில் கலந்து கொண்டு மதியம் 12.45 மணிக்கு மும்பையிலிருந்து புறப்பட்டு 17-ம் தேதி அதிகாலை 3.20 மணிக்கு நாகர்கோவில் வந்து சேருகிறோம்.*

ஜெபக்குறிப்புகள்

1. *ஆவியின் மாரிக்காக, பின்மாரி காலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள் சகரியா 10:1*
2. *பயண பாதுகாப்பிற்காக*
3. *பொருளாதார தேவைக்காக*
4. *ஊழியர்களின் சரீர ஆரோக்கியத்திற் காக*
5. *ஊழியத்தின் நிமித்தம் நாங்கள் விட்டுச் செல்லுகிற எங்கள் குடும்ப அங்கத்தினர்கள் பெரியோர், சிறி யோர், குழந்தைகளுக்காக.*

எழுப்புதலுக்காக இதய கதறல்

உபவாச ஜெபத்தை நடத்தும் ஊழியர்கள்

1. பாஸ்டர் **S. சாம் செல்வராஜ்,** *சென்னை*
   அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்
2. சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**
3. சகோ. **K. துரைசிங்,** *மதுரை*
   இந்திய அருட்பணி இயக்கம்(I.E.M.), *தமிழ்நாடு*
4. சகோ. **S. கிப்சன் சாமுவேல்**
   முன்னேற்ற செயலர்,
   வட இந்திய மிஷனெரி சங்கம்(NIMS), *குஜராத்*
5. பாஸ்டர் **E. அற்புதராஜ்**
   NIMS சபை, *சுந்தரபாண்டியம்*
6. சகோ. **W. பிரகாஷ்,** Key Board
7. மகன் **சாமுவேல்,** co-ordinator

திருமணம் 1

வருகையின் தூதன் அலுவலகத்தில் சுமார் 6 வருடங்கள் பணியாற்றின ஒரு சிறு பெண்ணுக்கு 28.12.2017 அன்று ஆண்டவருக்கு மகிமையாக, மிகவும் எளிமையாக திருமணம் நடந்தது. மிகவும் மோசமான சூழ்நிலையில் உள்ள அந்த பெண்ணின் குடும்பத்திற்காக தேவ கிருபையால் இதுவரை ஜெபித்தோம். தேவன் கிருபையாய் இரங்கி அந்த பெண்ணுக்கு ஒரு வாழ்க்கை துணையை ஏற்படுத்திக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

திருமணம் 2

மாதந்தோறும் உபவாச ஜெப ஊழி யத்தை ஆரம்பித்தபொழுதே, எனக்கு ஒரு ஏவுதல் இருக்கிறது என தொலை பேசியில் எங்களை தொடர்பு கொண்டு, மாதந்தோறும் இந்த உபவாச ஜெபத்தை தாங்குவது மாத்திரமல்ல, ஏகதேசம் எல்லா இடங்களுக்கும் எங்களோடே கூட வரும் ஒரு தேவ னுடைய பிள்ளை, தன்னுடைய மூத்த மகனுடைய திருமணத்திற்காக ஜெபிக்க எங்களிடம் வருந்தி கேட்டுக்கொண்டார் கள்.

தேவ கிருபையால் ஜனவரி 26-ம் தேதி அந்த திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டி ருக்கிறது. தேவன் ஒருவரே மகிமைபடு வாராக.

ஒரு ஊழியக்காரர், யார் தலைமேல் கை வைத்தாலும், அது எப்பேர்பட்ட வியாதியாயிருந்தாலும் உடனே சுகமாகி விடும். அந்த ஊழியரைப் பார்த்து ஊட்க நிருபர் ஒருவர் நீங்கள் ஜெபித்த நபர் சுகமாவதற்கு பதிலாக இறந்து போனால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அதற்கு பதிலாக அந்த ஊழியர், அடுத்த

நபருக்காக ஜெபிப்பேன் என்றார். அந்த நோயாளியும் சுகமாவதற்கு பதிலாக இறந்து போனால் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டது. தேவ ஊழியர் பதிலாக, **ஜெபிக்கிறது மாத்திரம் எனது கடமை சுகமளிப்பது கர்த்தர்** என்றார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தேவனுடைய ஊழியத்தைச் செய்யும் எனது நண்பர் ஒருவர், இவ்வளவு பாரங்களையும் வைத்துக் கொண்டு எப்படி ஓடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்.

"...நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.

அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்.

அதற்கு அவர் **என் கிருபை உனக்குப் போதும்;** பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். *2 கொரி.12:7-9*

9543221008

இந்த எண்ணின் தொலைபேசி நிறுவனம் மூடப்பட்டதினால் மொபைல் செயல்படாமல் போனதற்காக வருந்துகிறோம். இந்த நம்பரை மாற்றாமலே BSNLக்கு மாற்றியிருக்கிறோம். தொடர்ந்து தொடர்பு கொள்ளலாம்.

மேலும் அந்த பெண் வேலைக்கு வராதபடியினாலும் டிசம்பர் மாதம் அலுவலக பணியில் சிறிது சிரமப்பட்டு போனோம். ஆனாலும் கர்த்தர் நல்லவர்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

வெஸ்லி தேவதாசன்

(WESLEY DEVADASON)

		Time:
Office	:95432 21008	10.00 a.m to 1.00 p.m
Associate	:94897 40295	02.00 p.m to 6.00 p.m
For Prayer	:94980 30295	Sunday Holiday
Editor	:04652 03295	

கெத்செமெனேயிலே இயேசு ஜெபித்தது போல முழுமனதோடு ஜெபியுங்கள். நீங்கள் நிர்விசாரமாயிருந்து தேவனை உத்தமமாகத் தேடாவிட்டால் ஜெபிப்பதற்கான ஆவியான வரின் தூண்டுதல் உங்கள் ஆத்துமாவை விட்டு எடுபட்டுப் போகும்.

பத்திரிகை செய்திகள்

மதுரை–தூத்துக்குடி,
மணியாச்சி–நாகர்கோவில்
குமரி – திருவனந்தபுரம் இடையே

ரூ.3,600 கோடியில் இரட்டை ரெயில் பாதை திட்டம்

ரெயில்வே இணை மந்திரி ராஜென் கோஹெய்ன் அடிக்கல் நாட்டினார்

ஜன.– 24

நாகர்கோவில் ஜன.24 மதுரை–தூத்துக்குடி, வாஞ்சி மணியாச்சி–நாகர்கோவில், கன்னியாகுமரி–திருவனந்தபுரம் இடையே ரூ.3 ஆயிரத்து 600 கோடியில் செயல்படுத்தப்படும் இரட்டை ரெயில்பாதை திட்டத்துக்கு, நாகர்கோவிலில் நேற்று நடந்த விழாவில் மத்திய ரெயில்வே இணை மந்திரி ராஜென் கோஹெய்ன் அடிக்கல் நாட்டினார்.

அடிக்கல் நாட்டுவிழா

மதுரையில் இருந்து வாஞ்சி மணியாச்சி வழியாக தூத்துக்குடிக்கு (160 கிலோமீட்டர் தொலைவு) ரூ.1182.38 கோடி மதிப்பீட்டிலும், வாஞ்சி மணியாச்சியில் இருந்து நெல்லை வழியாக நாகர்கோவிலுக்கு (102 கி.மீ. தொலைவு) ரூ.1003.94 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் வழியாக திருவனந்தபுரம் சென்டிரல் ரெயில் நிலையத்துக்கு (86.56 கி.மீ. தொலைவு) ரூ.1431.90 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.3618.22 கோடி மதிப்பீட்டில் மின்மயமாக்கலுடன் கூடிய இரட்டை ரெயில் பாதை அமைக்க மத்திய ரெயில்வே துறை முடிவு செய்துள்ளது.

குமரி உள்ளிட்ட தென்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளில் ஒன்றான இந்த இரட்டை ரெயில் பாதை திட்ட பணிகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா மற்றும் நாகர்கோவில் கோட்டார் சந்திப்பு தெயில் நிலையத்தில் 2,3–வது நடைமேடைகளுக்கான எஸ்கலெட்டர் (நகரும படிக்கட்டு வசதி) தொடக்க விழா, இந்த ரெயில் நிலையத்துக்கான 100 சதவீத எல்.இ.டி. மின்விளக்கு வசதி திட்ட தொடக்க விழா, வைபை இணையதள வசதி தொடக்க விழா ஆகியவை நாகர்கோவல் கோட்டார் சந்திப்பு ரெயில் நிலைய வளாகத்தில் நேற்று நடந்தது.

மத்திய மந்திரிகள்

விழாவில் தெற்கு ரெயில்வே பொது மேலாளர் குல்ஷ் ரெஸ்தா வரவேற்றுப் பேசினார். மத்திய ரெயில்வே இணை மந்திரி ராஜென் கோஹெய்ன் கப்பல் மற்றும் நிதித்துறை இணை மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினார்கள்.

இரட்டை ரெயில்பாதை திட்டத்துக்கு அடிக்கல் நாட்டி, அதற்கான கல்வெட்டை திறந்து வைத்தும், நாகர்கோவில் கோட்டார் சந்திப்பு ரெயில்நிலைய 2 மற்றும் 3–ம் நடைமேடைகளுக்கான எஸ்கலேட்டர் வசதி, எல்.இ.டி. மின் விளக்கு வசதி வைபை வசதி ஆகியவற்றை தொடங்கி வைத்தும் ரெயில்வே இணை மந்திரி ராஜென் கோஹெய்ன் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:–

உலகிலேயே மிகப்பெரிய போக்குவரத்து சேவை நிறுவனமாக இந்திய ரெயில்வே நிறுவனமாக இந்திய ரெயில்வே நிறுவனம் திகழ்கிறது. 65 ஆயிரம் கி.மீ. நீள ரெயில்பாதையை இது கொண்டுள்ளது. இதில் தென்னக ரெயில்வே 6 கோட்டங்களைக் கொண்டு செயல்படுகிறது.

136 ரெயில் நிலையங்களில்...

ஒருங்கிணைந்த பாதுகாப்பு (நிர்பயா நிதி) திட்டத்தின் கீழ் சென்னை நுங்கம்பாக்கம் ரெயில் நிலையத்தில் பரீட்சை சார்த்த முறையில் கண்காணிப்பு கேமரா அமைத்து கண்காணிக்கப் படுகிறது. மேலும் தென்னக ரெயில் வேக்கு உட்பட்ட 136 ரியல் நிலையங்களில் இந்த திட்டபணிகள் ரெயில் டெல் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை சென்டிரல், எழும்பூர் திருச்சி, மதுரை, கோவை, கோழிக்கோடு, திருவனந்தபுரம் ஆகிய 7 முக்கிய ரெயில் நிலையங்களில் இந்த ஆண்டு பெண்களுக்கான சிறப்பு வசதிகளுடன் கூடிய மையங்கள் தொடங்கப்பட உள்ளன. தமிழகத்தில் ரெயில் பயணிகளின் அடிப்படை வசதிக்காக ரூ.45 கூகாடி செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கூடுதலாக ரூ.75 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான திட்ட பணிகளும் நடைபெற்று வருகின்றன.

3 ஆண்டுகளுக்குள்..

தற்போது மதுரை–வாஞ்சி மணியாச்சி–தூத்துக்குடி ரெயில் பாதை, வாஞ்சி மணியாச்சி–நெல்லை–நாகர்கோவில் ரெயில்பாதை, கன்னியாகுமரி–நாகர்கோவில்–திருவனந்தபுரம் ரெயில்பாதை ஆகிய 3 பிரிவுகளில் மின்மயமாக்கப்பட்ட இரட்டை ரெயில் பாதை திட்டம் ரூ.3618 கோடியில் நிறைவேற்றப்படுகிறது. விரைவில் இந்த பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ரெயில்பாதைகளை மின்மயமாக்கும் பணிகளை விரைந்து மேற்கொண்டு வருகிறோம்.

ஏற்கனவே 90 சதவீத ரெயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு ஈரோடு, கரூர், திருச்சி வழித்தடம் மின்மயமாக்கப்படும். மேலும் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் தென்னக ரெயில்வேயில் உள்ள அனைத்து வழித்தடங்களும் மின்மயமாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ரெயில்வே இணை மந்திரி ராஜென் கோஹெய்ன் பேசினார்.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To